සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## சைவநெறி - ශෛව ධර්මය

தரம் : **9** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி I**

- ♦ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- ♦ **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. காத்தல் தொழிலை செய்பவர்
   1) பிரம்மா 2) உருத்திரன் 3) விஷ்ணு 4) சதாசிவன்

2. காதலாகி என்ற தேவாரம் பாடப்பட்ட தலம்,
   1) திருநல்லூர்ப் பெருமனம் 2) திருகுறுக்கை வீரட்டானம்
   3) சிதம்பரம் 4) சீர்காழி

3. கரணம் என்பது,
   1) ஒரு திதியின் கால் பங்கு 2) ஒரு திதியின் அரைப் பங்கு
   3) ஒரு திதியின் முக்காற் பங்கு 4) ஒரு திதியின் முழுப் பங்கு

4. கிருகஸ்தம் என்பது
   1) மாணவ நிலை 2) துறவு நிலை
   3) இல்லறம் 4) துறவுக்கு ஆயத்தமாகும் நிலை

5. காப்பதோர் வில்லும் அம்பும் என்ற தேவாரத்தில் கூறப்பட்டுள்ள அடியார்,
   1) சம்பந்தர் 2) இளையான்குடி மாறநாயனார்
   3) சுந்தரர் 4) கண்ணப்ப நாயனார்

6. சக்திக்கு உரிய விரதங்களில் ஒன்று,
   1) சிவராத்திரி 2) பிரதோசம் 3) நவராத்திரி 4) கந்தசஷ்டி

7. செடியாக வல்வினைகள் என்ற பாடலை பாடியவர்,
   1) பெரியாழ்வார் 2) மதுரகவியாழ்வார்
   3) குலசேகர ஆழ்வார் 4) திருமங்கையாழ்வார்

8. திருப்பாவை பாடியவர்,
   1) ஆண்டாள் 2) திருப்பாவையாழ்வார்
   3) தொண்டரடிப் பொடியாழ்வார் 4) பெரியாழ்வார்

9. ஏழிசையால் இசைப்பயனால் என்ற தேவாரம் பாடியவர்,
   1) சம்பந்தர் 2) சுந்தரர் 3) அப்பபர் 4) மாணிக்கவாசகர்

10. மற்றுப்பற்று எனக்கு என்ற தேவாரத்தின் பண்,
   1) பழம்பஞ்சுரம் 2) காந்தாரபஞ்சமம் 3) நட்டபாடை 4) கௌசிகம்

11. சுந்தரர் கடைபிடித்த மார்க்கம்,
   1) சற்புத்திர மார்க்கம் 2) சன்மார்க்கம் 3) தாச மார்க்கம் 4) சக மார்க்கம்

12. வருட விரதம் ஒன்று,
   1) வெளிக்கிழமை 2) கார்த்திகை 3) மகா சிவராத்திரி 4) பிரதோசம்

13. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை என்ற பாடலை பாடியவர்?
   1) நவாலியூர் சோமசுந்தரப்புலவர் 2) நாவுக்ரசர்
   3) விபுலானந்தர் 4) ஆறுமுகநாவலர்

14. ஈழ நாட்டை சிவ பூமி எனப் போற்றியவர்,
   1) திருவள்ளுவர் 2) திருமூலர்
   3) திருமாளிகைத் தேவர் 4) நம்பியாண்டார் நம்பி

15. சரியைத் தொண்டைக் கடைப்பிடித்த நாயனார்,
   1) சம்மந்தர் 2) சுந்தரர் 3) நாவுக்கரசர் 4) மாணிக்க வாசகர்

16. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை தொகுத்தவர்,
   1) சேக்கிழார் 2) நம்பியாண்டார்
   3) ஸ்ரீமத் நாத முனிவர் 4) பெரியாழ்வார்

17. திருப் பாண்டிக்கொடு முடியில் எழுந்தருளியிருக்கும் இறைவர் பெயர்
   1) கௌரியட்டை 2) மாதுடையாள்
   3) வடிவாம்பிகை 4) பண்மொழியம்மை

18. திருவாசகம் பாடியவர்,
   1) சம்பந்தர் 2) மாணிக்க வாசகர் 3) சுந்தரர் 4) சேக்கிழார்

19. நையாத மனத்தினனை என்று தொடங்கும் திருவிசைப்பா பாடியவர்,
   1) கருவூர்த்தேவர் 2) சேந்தனார் 3) கண்டராதித்தர் 4) சேதிராயர்

20. இறந்த தந்தையின் பொருட்டு அனுஷ்டிக்கப்படும் விரதம்
   1) ஆடி அமாவாசை 2) பௌர்ணமி 3) சித்திரா பூரணை 4) பூரணை

**பகுதி II**

1. பின்வரும் திருப்பாடல்களில் எவையேனும் இரண்டினை வரிசைக்கிரமமாக அடிமுறைப் பிழையறாது எழுதுக. பாடியவர் பெயர், பாடப்பட்ட தலம் என்பவற்றை எழுதுக.
   1) காப்பதோர் வில்லும் அம்பும் .....
   2) மங்கையர்கரசி வளர்கோன் ..............
   3) மற்றுப்பற்று எனக்கு ..................
   4) துஞ்சலும் துஞ்சல் இலாத ...........

(2x6 =12 புள்ளிகள்)

2. 1) சைவ சமய வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய பெண் அடியார்கள் யாவர்?
   2) அவர் ஆற்றிய பணிகள் எவை?
   3) மங்கையகரசியார் சம்மந்தப் பெருமானை எவ்வாறு போற்றுகின்றார்?
   4) பாண்டிய நாட்டில் ஞான சம்மந்தர் சைவ சமயத்தை மீண்டும் எவ்வாறு ஸ்தாபித்தார்?

(12 புள்ளிகள்)

3. 1) சரியைத் தொண்டுகள் நான்கு எழுதுக.
   2) தாசமார்க்கம் என்றால் என்ன? இம்மார்க்கத்தை கடைபிடித்த நாயனார் யார்?
   3) கிரியை என்பது யாது? கிரியை வழிபாடுகள் 3 எழுதுக.
   4) யோகம் என்றால் என்ன? அதன் படிமுறைகள் யாவை?

(12 புள்ளிகள்)

4. 1) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்ற தொடரின் பொருள் யாது?
   2) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலுள்ள பாசுரங்களை அருளிய ஆழ்வார் எத்தனை பேர்? இவற்றை தொகுத்தவர் யார்?
   3) முதலாழ்வார்கள் என்று குறிப்பிடப்படுபவர்கள் யார்?
   4) நம்மாழ்வாரின் சிறப்பு யாது? நம்மாழ்வாரை தெய்வமாகக் கருதி பாடிய ஆழ்வார் யார்?

(12 புள்ளிகள்)

5. 1) விரதம் என்றால் என்ன? விரதங்கள் எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளன?
   2) சிவனுக்குரிய விரதங்கள் 3 எழுதுக.
   3) சதுர்த்தி, சங்கடகர சதுர்த்தி இரண்டிற்குமிடையிலான வேறுபாடுகள் யாது?
   4) நவராத்திரி விரதம் யாரை நோக்கி அனுஷ்டிக்கப்படுகிறது? இவ்விரதம் அனுஷ்டிக்கப்படும் கால எல்லை யாது?

(12 புள்ளிகள்)

6. 1) இந்த உடம்பு நமக்குக் கிடைத்தது எதற்காக என்று நாவலப் பெருமான் கூறியுள்ளார்?
   2) உடலை ஓம்புவதற்கு செய்ய வேண்டியவை எவை?
   3) திரிகரணங்கள் எவை?
   4) உயிர்கள் மேல் இரக்கம் காட்டிய மன்னர்கள் யார்? எமது முன்னோர்கள் உயிர் இரக்கம் கொண்டு செய்த காரியங்கள் எவை?

(12 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1) தலயாத்திரை
   2) சைவநாற்பாதங்கள்
   3) ஆடிப்பிறப்பு
   4) மங்கையர்கரசியார்

(12 புள்ளிகள்)